Education & Communities

Public Schools NSW

**HEAD LICE TREATMENT OPTIONS**
**INFORMATION FOR PARENTS AND CARERS**
**TAMIL**

# தலைப் பேன் சிகிச்சைத் தெரிவுகள்

## பெற்றோர் மற்றும் கவனிப்பளார்களுக்கான தகவல்

## தலைப் பேனை அகற்ற இரண்டு சிகிச்சை முறைகள் உள்ளன.

1. கையால் அகற்றும் முறை (தலைப் பேனை நீக்கும் சீப்பு ஒன்றைக் கொண்டு அகற்றுதல்)
2. இரசாயணப் பொருட்களைப் பாவித்து அகற்றுதல்

### கையால் அகற்றுதல்

கையால் அகற்றும் முறையில், உலர்ந்த கேசத்தில் சாதாரண கண்டிஷனர் (கேசவர்த்தினி) ஒன்று பாவிக்கப்படும். கேசம் முழுதும் கண்டிஷனரைப் பூசிய பிறகு, சாதாரண சீப்பு ஒன்றைப் பாவித்து, கேசத்திலுள்ள சிக்கல்களை அகற்றி, கேசத்தை தனித் தனி பகுதிகளாகப் பிரிக்கவும். ஒவ்வொரு பிரிவையும் நீண்ட, மெல்லிய பற்களைக் கொண்ட உலோகத்திலான பேன் அகற்றும் சீப்பு ஒன்றைப் பாவித்து சீவவும். கேசத்திலுள்ள கண்டிஷனர் பேன்களைக் கொல்லாது, ஆனால் அவற்றை எளிதாக அகற்றும் வகையில் 20 நிமிட நேரத்திற்கு பேன்களை இது மலைத்துப் போகச் செய்யும். ஈர்களையும் (முட்டைகள்), மலைத்துப் போன பேன்களையும் பேன் சீப்பு அகற்றிவிடும். இந்த சீப்பை வெள்ளை நிற திசு காகிதத்தில் துடைத்துவிட்டு ஈர் மற்றும் பேன் ஏதாவது காகிதத்தில் இருக்கிறதா என்று பாருங்கள். பேன் அல்லது ஈர் எதுவும் தென்படாத வரைக்கும் இந்த சீப்பால் சீவுங்கள். பேனும், ஈறும் அறவே இல்லாமல் போகும் வரைக்கும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் இந்த முறையைப் பாவிக்கவும் (பொதுவாக 7 - 10 நாட்கள்).

தலைப் பேனை அகற்ற இதுவே சிறந்த வழியாகும், ஏனெனில் இது நல்ல பலன் அளிக்கும், மற்றும் மருந்து எதிர்ப்பு சக்தியை தலைப் பேன்கள் வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பை இது தடுக்கிறது, மேலும் இதனால் தோல் எரிச்சல் ஏற்படும் அபாயமும் குறைவு.

பேன்கள் தலையில் நிலையாக அமர்வதற்கு முன்பே பேன்களை அகற்ற இந்த கையால் அகற்றும் முறை உதவுகிறது. நல்ல பேன் சீப்பு ஒன்றைக் குளியலறையில் வைத்துக் கொண்டு ஒவ்வொரு முறை உங்கள் குடும்பத்தினர் தலை குளித்த பிறகும் இந்த சீப்பால் சீவுங்கள். அதிக முட்டைகளை இடுவதற்கு முன்பே பேன்கள் அகற்றப்படுவதை இது உறுதி செய்யும்.

உங்களது பிள்ளைகள் வளர்ந்திருந்து அவர்களால் தானாகவே தலை குளிக்க முடியும் என்றால், சீப்பைப் பாவிக்குமாறு அவர்களை ஊக்குவியுங்கள். அல்லது உங்கள் பிள்ளையை நீங்கள் தலைக் குளிப்பாட்டும் இடத்தில் சீப்பு ஒன்றை வைத்திருந்து ஒவ்வொரு முறை பிள்ளைக்கு தலை குளிப்பாட்டும் போதும் சீப்பைப் பாவியுங்கள்.

### இரசாயணப் பொருட்களைப் பாவித்து நீக்குதல்

இரசாயணப் பொருட்களைப் பாவிக்கும் சிகிச்சை முறையை நீங்கள் தெரிவு செய்தால், கொடுக்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களைக் கவனமாகப் பின்பற்ற வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஒரு இரசாயண சிகிச்சை பயனளிப்பது போல் தெரியவில்லை என்றால், மீண்டும் அதையே பாவிக்க முயலாதீர்கள். மாறாக, இன்னொரு இரசாயணக் கலவையைப் பாவிக்கும் சிகிச்சை முறைக்கு மாறுங்கள், அல்லது சீப்பு மற்றும் கண்டிஷனரைப் பாவிக்கும் முறையைப் பயன்படுத்துங்கள். புதிதாகப் பொரித்த பேன் முட்டைகள் எதுவும் இருந்தால் அவற்றைக் கொல்வதற்காக இந்த சிகிச்சயை 7 நாட்களில் நீங்கள் திரும்பவும் செய்ய வேண்டும். சிகிச்சை பலனளிப்பதை உறுதிப்படுத்த பேன் அகற்றும் சீப்பு ஒன்றை நீங்கள் பாவிக்க வேண்டியிருக்கும். பேன்கள் செத்திருந்தால் சிகிச்சை பலனளித்திருக்கிறது என்று அர்த்தம். உயிருள்ள பேன்கள் இருந்தால் சிகிச்சை வேலை செய்யவில்லை என்று அர்த்தம்.

பேன் மற்றும் ஈர் ஆகியவற்றிலிருந்து உங்கள் பிள்ளை விடுபட்ட பிறகு, மெல்லிய பற்களையுடைய பேன் சீப்பு மற்றும் கண்டிஷனர் ஆகியவற்றைப் பயன்படுத்தி தொடர்ந்து பிள்ளையை சோதித்து வரவேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். முன்னதாகவே கண்டுபிடித்து சிகிச்சையளிப்பது குடும்பத்தினருக்கும், வகுப்பிலுள்ள சக மாணவர்களுக்கும் மீண்டும் பேன் மொய்ப்பு ஏற்படுவதைத் தடுக்கும்.

#### படுக்கை மற்றும் ஆடைகளைப் பற்றி என்ன செய்யலாம்

படுக்கை விரிப்புகள், தொப்பிகள், ஆடைகள் மற்றும் தட்டுமுட்டு சாமான்கள் ஆகியவற்றில் பேன்கள் அல்லது ஈர்கள் அமராது என்றும், மற்றும் ஒரு சிகிச்சைத் தெரிவாக இவற்றை வெளுப்பதினால் பலன் ஏதும் இல்லை என்றும் ஆய்வுகள் குறிகாட்டுகின்றன. ஈர்களும், பேன்களும் மனிதத் தலையில் மட்டுமே வாழும். தலையிலிருந்து அவற்றை அகற்றிவிட்டால், சீக்கிரமே அவை உலர்ந்து செத்துப்போகும்.

'NSW சுகாதார சேவை'யின் 'Nitbusters' வலைத்தளத்தில் உள்ள தகவல்களின் அடிப்படையில் இத்தகவகல்கள் அமைந்துள்ளன.